தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, நவம்பர் 20, வியாழக்கிழமை.

கார்த்திகை 5, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு ''

தான் சொல்லுவன எளிய பொருளுடையனவாகப் பதியுமாறு சொல்லி, தான் பிறரிடம் கேட்பவற்றின் நுட்பமான பொருளையும் ஆராய்ந்து காண்பது அறிவாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 14–11–1986 அன்று தள்ளிப்போடப்பெற்ற இரண்டு வினாக்கள் முதலில் எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

லெவி அளவை அதிகரித்தல்

3—(*வினா எண். 7637) திரு. கே. உச்சி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது வசூலிக்கப்படும் லெவி அளவை அதிகமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நெல் கொள்முதல் செய்யப்படுகின்றபோது 50 சதவீதம் லெவி என்ற முறையில் வசூல் செய்கிறார்கள். ஆகவே, இந்த 50 சதவீதம் என்பது அதிகமாக இருப்பதால், தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் விலையில் மிகவும் வீழ்ச்சி ஏற்படுகிறது. எனவே இந்த 50 சதவீதத்தை 25 சதவீதமாகக் கொடுத்தால் விவசாயிகளுக்கு நல்ல சலுகையாக இருக்கும். எனவே, அதைச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதியில் முழுவதும் கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழகத்தின் மற்ற பகுதிகளில் வணிகர்களிடமிருந்து 50 சதவீதம் லெவி வசூல் செய்யப்படுகிறது. இதை 75 சதவீதமாக உயர்த்தலாமா என்ற யோசனைதான் பரிசீலனையில் இருந்து, இந்திய அரசும் அது வேண்டாம் என்று தெரிவித்ததன் காரணமாக, 50 சதவீதமே தொடர்கிறது.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லெவியை அதிகரிப்பதுதான் நியாயம். அப்படி அதிகரிப்பதால் மக்களுக்கு கணிசமாக அரிசியை குறைந்த விலையில் கொடுக்க முடியும் என்பதால் அரசு இதை மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நமக்குப் போதுமான அளவு இப்போது கொள்முதல் செய்யப்படுகின்ற காரணத்தால், 50 சதவீதத்தை, 75 சதவீதமாக உயர்த்த வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது. எது நியாயம் என்பதில் கருத்து வேறுபாடு ஏற்படுவது இயற்கை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பருவமழை தவறியதன் காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற உற்பத்தி ஊக்கத் தொகையை சற்று உயர்த்தித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆர். தியாகராாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உணவுத் துறையில் விவசாயிகளுக்குக் கொடுக்கும் அந்த விலையில் ஏகப்பட்ட மாறுதல் இருக்கிறது. ஏரியாவிற்கு ஏரியா மாறுகிறது. எங்கள் தென் ஆற்காடு மாவட்டம் தஞ்சை மாவட்டத்தை ஒட்டி இருக்கிற மாவட்டம்.

1986 நவம்பர் 20]

தஞ்சையில் ஒரு குவிண்டாலுக்குக் கிட்டத்தட்ட 30 ரூபாய் போனஸ் என்ற முறையிலே அவர்களுக்கு விலையை விட அதிகமாகக் கொடுக்கிறார்கள். எங்களுடைய தென் ஆற்காடு மாவட்டத்தில் நெல் 120 ரூபாய்கூட போவதில்லை. 85 ரூபாய், 90 ரூபாய்க்குத்தான் நாங்கள் விற்றுக்கொண்டு இருக்கிறோம். எனவே, எங்கள் மாவட்டத்திற்கும் அந்த போனசை வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, காவிரி டெல்டாப் பகுதியில் முழுவதும் நாம் வாங்கிக் கொள்கிறோம். மற்ற பகுதிகளில் விவசாயிகள் வெளியிலே விற்பதற்கு வாய்ப்பிருக்கிறது. வெளியிடத்திலிருந்துதான் நாம் பாதியைப் பெற்றுக் கொள்கிறோம். வெளி விலை குறைகிறது என்றால், அது ஒரு சில நேரங்களில் ஏறுகிறபோதும் இலாபம் கிடைக்கும். ஆகவே, தஞ்சைப் பகுதியில் உள்ள அந்த விலையை மற்ற பகுதிகளுக்குத் தருவதற்கு தற்போது உத்தேசம் ஏதும் இல்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களில் இருந்து வாங்குகின்ற நெல்லுக்குக் கொடுக்கின்ற விலைக்கும் தமிழகத்திலே கொள்முதல் செய்கின்ற நெல்லுக்குக் கொடுக்கின்ற விலைக்கும் வித்தியாசம் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அந்த அளவிற்கு உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, லெவி, ஏகபோக கொள்முதல் பற்றிய இந்த வினா தமிழகத்தை மட்டும் பொறுத்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தஞ்சை மாவட்டத்திலே முழுக் கொள்முதலும் ஏனைய பகுதிகளிலே வணிகர்களிடமிருந்து பாதிக்கும் அதிகமாக கொள்முதல் செய்வதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு பொது விநியோகத்தின் மூலமாகக் கொடுக்க எவ்வளவு அரிசி தேவைப்படும் என்றும், எவ்வளவு கொள்முதல் செய்திருக்கிறது என்றும் தெரிவிப்பார்களா? இந்த ஆண்டு போதுமான அளவு நமக்கு நெல் கொள்முதல் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தால், மத்தியத் தொகுப்பிலிருந்து நாம் உணவுப் பொருளை வாங்க வேண்டிய அவசியம் இல்லையா ? அல்லது வெளி மாநிலங்களில் அரிசி தேவைப்படுகின்றபோது, அதைக் கொடுக்கின்ற நிலைமையில் தமிழக அரசு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 1986 சம்பா பருவத்தில் 10.02 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 1986 குறுவையில் 24—11—1986 வரையில் 1.25 இலட்சம் டன் நெல் கொள்முதல் ஆகியுள்ளது. இன்னும் சம்பா பருவத்தில் 12 இலட்சம் டன் கொள்முதல் செய்ய இருக்கிறோம். ஏதேனும் குறைபாடுகள் இருக்குமானால் மத்திய அரசின் தொகுப்பிலிருந்து பெற வேண்டிய அவசியம் ஏற்படும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜ் மாவட்டம் மிகவும் பற்றாக்குறை மாவட்டங்களில் ஒன்று. வணிகர்களிடமிருந்து 50 சதவீதம் லெவி கொள்முதல் செய்கிறபோது விலைவாசி மேலும் 50 சதவீதம் ஏறுகிறது. அதே நேரத்தில் 50 சதவீதம் கொடுக்காமல் இருப்பதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அதை எல்லாம் வணிகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அந்தப் பற்றாக்குறை மாவட்டத்தில் 25 சதவீதம் என்று ஆக்கினால் அவர்கள் மனம் உவந்து கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அதை அரசு செய்வதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கோரிக்கையை வியாபாரிகளும் அரசுக்குத் தந்து இருக்கிறார்கள். அது அரசின் ஆய்வில் இருக்கிறது.

சேரன்மாதேவியில் கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்துதல்

4—(*வினா எண். 9480) திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் குறிப்பாக சேரன்மாதேவி தொகுதியில் நெல் விலையில் ஏற்பட்டுள்ள சரிவினைத் தடுக்க அரசு கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை நிலையங்கள் திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்விக்கு இடமில்லை.